# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 671/2016/பே

ஆணை எண்: 193/நாள்:27–07–2017

**திரு.ஓ.ஹோமர்லால், M.A.LLB**
**CPI(ML) குமரி மாவட்ட உதவி செயலாளர்,**
**கருங்கல்,**
**கன்னியாகுமரி மாவட்டம் – 629 157.** — **முறையீட்டு மனுதாரர்**

**திருமதி. ஜோஸ் கிரேஸ்லின்,**
**பேரூராட்சி மன்றத் தலைவர் (முன்னாள்),**
**முளகுமுடு,**
**கன்னியாகுமரி மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்**

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஓ. ஹோமர்லால் என்பவரது 20.12.2014ம் தேதியிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குனர், சென்னை அவர்களது கடித ந.க.எண். 5616/2015/இ/நாள்:20.06.2016 ன்படி இம்முறை மன்ற நடுவத்தில் 11.07.2016 ல் பெறப்பட்டு 671/2016 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

திரு. ஓ. ஹோமர் லால் தனது 20.12.2014ம் தேதிய முறையீட்டு மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு பேரூராட்சித் தலைவி திருமதி. ஜோஸ்கிரேஸ்லின் என்பவர் மீது கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் முளகுமூடு பேரூராட்சியில் தலைவியாக இருந்த திருமதி. ஜோஸ்கிரேசிலின் என்பவர் ஏற்கனவே அரசு ஒப்பந்தக்காரராக பணிபுரிந்தவர் என்றும் தற்போது முளகுமூடு பேரூராட்சியில் பெருமளவு ஊழல் செய்து சமீபத்தில் நவீன அடுக்குமாடி கட்டிடமும் கட்டியுள்ளார் என்றும் இவர் பேரூராட்சி தலைவராக இருந்துகொண்டே பினாமி பெயரில் முளகுமூடு பேரூராட்சியில் ஒப்பந்த பணிகளும் செய்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மீது டெண்டர் விடுவதில் முறைகேடு, குடிநீர் இணைப்பில் ஊழல், வறுமைக்கோடு பட்டியலில் முறைகேடு, ஆழ்துளை கிணறு அமைத்தலில் முறைகேடு என பல்வேறு புகார்கள் மனுதாரரால் கூறப்பட்டுள்ளன. மனுதாரர் 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின்படி முறையீட்டு மனுவை தாக்கல் செய்திட வேண்டுமென்பதால் இம்முறைமன்ற நடுவ அமைப்பு கடித எண்.671/2016/பே/நாள்:19.07.2016ல் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கக் கோரி அறிவிப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது.

திரு. ஒ. ஹோமர்லால், அவர்களின் முறையீட்டு மனு சம்பந்தமாக 04.01.2017 அன்று நேரடி விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.671/2016/பே/நாள்:01.12.2016ல் அனுப்பப்பட்டது. அன்றைய நேர்வில் மேற்படி முறையீட்டு மனுதாரர் கலந்து கொள்ளாததால், முறையீட்டு மனுதாரரின் 03.01.2017ம் தேதிய கோரிக்கையின்படி இன்னொரு வாய்ப்பாக 20.02.2017 பிற்பகல் 3.00 மணிக்கு நேரடி விசாரணைக்கு ஆஜராக கோரி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.671/2016/பே நாள்:06.01.2017ன் மூலம் தெரிவிக்கப்பட்டு 20.02.2017 அன்றைய நேரடி விசாரணையில் முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது 20.02.2017ம் தேதிய நேரடி வாக்குமூலத்தில் மேற்படி விவரம் குறித்து தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பு பிரிவிற்கும் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கும் புகார் மனுக்கள் அனுப்பியதாகவும் இம்முறைமன்ற நடுவ அமைப்பிற்கு அனுப்பிய மனு முறையாக இல்லாத நிலையில், விதிகளின்படி மனுவினை உரிய நீதிமன்ற வில்லை ஒட்டி ஒரு வாரத்திற்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

பேரூராட்சித் தலைவியாக இருந்த திருமதி. ஜோஸ்கிரேஸ்லின் என்பவர் பல்வேறு முறைகேடுகள் செய்து முளகுமூடு பேரூராட்சி எல்லையினுள் நவீன அடுக்குமாடி கட்டியுள்ளார் எனவும் இது குறித்த முழு விவரத்தினையும் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்து வாக்கு மூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

திரு. அருளப்பன் என்ற ஒப்பந்தக்காரரின் பெயரில் பேரூராட்சிகளின் பணிகளில் 80 சதவிகிதம் ஒப்பந்த பணிகளை தலைவரே செய்து வருகிறார் எனவும் தன்னுடைய 20.12.2014ம் தேதிய புகார் மனுவையே தனது வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து 09.10.2014 அன்று மாவட்ட ஆட்சியருக்கு புகார் மனு அனுப்பியுள்ளதாகவும் இதவரை அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட 7 பணிகளையும் இரண்டாவது தடவையாக சேர்த்து புதியதாக பணி செய்ததாக ஒப்புதல் வழங்கப்பட்டு பேரூராட்சி பணம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் எந்த பணிகளுக்கும் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி

கோரப்படவில்லை எனவும் விளம்பரமும் செய்யப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். குடிநீர் ஆதாரங்களுடைய அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியம் எண்ணிக்கை நிர்ணயிக்கும் சட்டத்தை மீறி சட்டத்திற்கு புறம்பாக குடிநீர் இணைப்பு வழங்கி அந்த பணம் பேரூராட்சி கணக்கிற்கு செல்லாமல் பேரூராட்சித் தலைவரும், ஒப்பந்தக்காரரும் எடுத்துக் கொள்வார்கள் எனவும் இந்த தவறான செயலுக்கு உதவி செயற்பொறியாளரும், இளநிலை பொறியாளரும் உடந்தையாக இருந்துள்ளனர் எனவும் வறுமை கோட்டிற்கு கீழ் இல்லாதவர்களுக்கு அரசு சலுகைகள் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆழ்குழாய் கிணறு அமைக்கும்போது மதிப்பீட்டில் உள்ள ஆழங்கள் இல்லாமல் குறைவாகவே தோண்டி மதிப்பீட்டில் உள்ள அளவிற்கு பில் தயாரித்து பணம் வழங்கியுள்ளதாகவும் இதனை அலுவலர்களால் முறையாக மேற்பார்வை செய்யப்படவில்லை எனவும் இப்பணிகளில் தரமும் இருக்காது எண்ணிக்கையும் இருக்காது எனவும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து செயல் அலுவலர், முளகுமூடு அவர்களின் விளக்கத்தினை கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.671/TPT1/2016 நாள்:21.02.2017ன்படி அனுப்பப்பட்டது. செயல் அலுவலர், முளகுமூடு அவர்கள் தனது கடித எண்.266/2016/அ1/நாள்: 28.02.2017ல் தனது விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"...பேரூராட்சியில் அனைத்து ஒப்பந்த விளம்பரங்களும் ஒளிவுமறைவற்ற நடைமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்படும்போது ஒப்புறுதி பதிவு தபாலின் மூலம் அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கும் விளம்பர அறிவிப்பு அனுப்பப்பட்டு வருகிறதாகவும் அனைத்து பணிகளும் உரிய நடைமுறையை பின்பற்றி பொறியாளர் பிரிவின் மேற்பார்வையில் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். எந்த பணிகளிலும் முறைகேடுகள் எதுவும் நிகழவில்லை எனவும், மதிப்பீடு மற்றும் வேலை உத்திரவு உடன்படிக்கை அகியவற்றின் அடிப்படையில் அனைத்து பணிகளும் முறையாக நடைபெற்று வருவதாகவும் ஒவ்வொரு பணிக்கும் ஒரு முறை மட்டுமே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு பொறியியல் பிரிவினரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு மேலளவு செய்யப்பட்டதின் அடிப்படையிலேயே தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது எனவும், அரசு நிதியோ பொது நிதியோ தவறாக பயன்படுத்தப்படவில்லை எனவும் பேரூராட்சி மன்றக்கூட்டம் முடிவுற்றவுடன் மினிட் புத்தகத்தில் பதிவுகள் இறுதி செய்யப்பட்டு மன்றத் தலைவரால் ஒப்பமிடப்படுகிறதாகவும் தெரிவித்து கூட்டம் முடிவுற்ற பின்னர் எந்த பொருளும் சேர்க்கப்படுவதில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வீட்டு குடிநீர் இணைப்புகளை பொறுத்தமட்டில் முறைப்படி விண்ணப்பம் பெறப்பட்டு பேரூராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய அனைத்து கட்டணங்களும் வங்கி வரைவோலையாகவே பெறப்பட்டு வருகிறது எனவும் எந்த ரொக்கப் பரிமாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார், பயனீட்டாளரால் நியமனம் செய்யப்படும் குழாய் பொருத்துனரால் மட்டுமே

இணைப்பு வழங்கப்பட்டு வருவதாகவும், குடிநீர் திட்டப் பழுதுகள் அனைத்தும் பேரூராட்சியின் பணியாளரைக் கொண்டு பழுது சீர் செய்யப்பட்டு வருவதாகவும், பெரிய பழுதுகள் பொறியாளர் பிரிவில் இருந்து மதிப்பீடுகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்..." தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முளகுமூடு பேரூராட்சியில் 2006–2007ம் ஆண்டில் வறுமைக் கோட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் எண்ணிக்கை 1597 எனவும் இப்பட்டியலில் இருந்து எவரது பெயரும் நீக்கம் செய்யப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், நாகர்கோவில் அவர்களின் கடித எண். 3119/2009/ப.3/நாள்:14.08.2009 ன்படி முளகுமூடு பேரூராட்சிக்குட்பட்ட 65 வயதிற்கு மேற்பட்ட 22 ஏழை மக்களை வறுமைக் கோட்டின் கீழ் சேர்க்க உத்திரவு வழங்கப்பட்டதன் அடிப்படையில் முளகுமூடு பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண் 56/2010 நாள் 05.03.2010 ன்படி வறுமைக் கோட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண்.ஒ.1/23033/2012/நாள்:07.08.2012 ன்படி இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்கு 35 நபர்களை வறுமை கோட்டு பட்டியலில் சேர்க்க அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் முளகுமூடு பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 292/2012 நாள் 31.10.2012 ன்படி வறுமைக் கோட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அந்தியோதையா அன்னயோஜனா திட்ட பயனாளிகளை நீக்குவதற்கும் பேரூராட்சிக்கு எந்த விதமான தொடர்பும் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டும் பொதுமக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீராக விநியோகம் செய்யும் பொருட்டும் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் சிறுமின்விசை திட்டங்களுக்கான மதிப்பீடுகள் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு, திறந்த ஒப்பந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பொறியாளரின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உதவி செயற்பொறியாளரால் பட்டியல் மேலொப்பம் பெறப்பட்டு தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது என்றும் இதில் முறைகேடுகள் எதுவும் இல்லை எனவும் தெரிவித்து இதுசம்பந்தமாக ஒளி நகல்களின் விவரங்களையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை கடித எண்.671/2016/பே/நாள்:06.04.2017ன் படி முளகுமூடு பேரூராட்சியின் தற்போதயை செயல் அலுவலர் திரு. தே. சார்லஸ் 22.05.2017 அன்று முறைமன்ற நடுவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதன்படி ஆஜராகி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் கீழ்கண்ட விவரங்களை பதிவு செய்துள்ளார்.

திரு. தே. சார்லஸ், முளகுமூடு பேரூராட்சியில் கடந்த இரண்டு மாதங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்னர் தான் மருங்கூர் பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், தனக்கு முன்னர் திருமதி. ருக்மணி என்பவர் முளகுமூடு பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்தார் எனவும் திரு. ஒ. ஹோமர் லால் என்பவருடைய புகார் மனு பற்றிய விவரம் தனக்கு தெரியும் எனவும், இந்த பேரூராட்சியில் 25.10.2011 அன்று திரு. ஜோஸ் என்பவர் தலைவராக பதவி ஏற்றார் எனவும், 25.10.2011 க்கு முன்பே அவர் மனைவி பெயரில் வீடு கட்டியிருந்ததாகவும் 04.01.2011 அன்று வீடு கட்டுவதற்காக கட்டிட அனுமதி பெற்று கட்டிடம் 2012ல் முடிக்கப்பட்டதாகவும் இக்கட்டிடத்திற்கான சொத்து வரி 2012 ஜுன் ல் விதிக்கப்பட்டதாகவும், சொத்து வரியாக ரூ.1226/– நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் தனது 22.05.2017 ம் தேதிய வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். புகார் மனுவில் தெரிவித்துள்ள 34 பணிகளில் 7 பணிக்கான பணிகள் ஏற்கனவே செய்த பணிகள் என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அது உண்மை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு. ஒ. ஹோமர் லால் பேரூராட்சியில் ஒப்பந்தக்காரர் எனவும் அவர் ஒப்பந்த பணிகளில் உரிய கவனம் செலுத்தாமல் மிகுந்த கால தாமதம் ஏற்படுத்தி பிற ஒப்பந்தக்காரர்களோடு தேவையற்ற பிரச்சினை ஏற்படுத்தி ஒப்பந்த முறையில் தரமற்ற பணிகள் செய்ததாலும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் இவரை கருப்பு பட்டியலில் சேர்த்து பேரூராட்சியின் ஒப்பந்தக்காரர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டதாகவும் தெரிவித்து இதனை தொடர்ந்து இவரின் முழு நேர பணி பிறரை பற்றி புகார் மனு எழுதுவதுதான் எனவும் தெரிவித்துள்ளார். பொது நிதியிலோ மற்ற நிதியிலோ செய்த பணிகளில் ஊழல் எந்த வகையிலும் நடைபெறவில்லை எனவும் ஏற்கனவே செய்த பணிகள் மீண்டும் செய்யப்படவில்லை எனவும், முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் கூட்டம் முடிந்த பிறகு கூடுதலாக எதையும் தலைவர் எழுதியது இல்லை, குடிநீர் இணைப்பு விதிகளின்படி உரிய கட்டணங்கள் உரிய முறையில் வசூலிக்கப்பட்டு உள்ளதாகவும் தனது நேரடி வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் வறுமைக் கோடு பட்டியல் தயார் செய்யும் வேலை பேரூராட்சிகளின் பணி இல்லை என்பதால் இதில் முறைகேடு செய்ய வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. கணபதி என்பவர் வெளிநாட்டில் வேலை செய்பவர் இல்லை அவர் ஒரு முடக்குவாதி எனவும் தனது வாக்குமுலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு. இராயப்பன் ஒரு புற்று நோயாளி எனவும் திரு. ஜோசப், மற்றும் திரு. ராஜு ஆகியோர் வறுமைக் கோட்டிற்குள் இருப்பவர்கள் எனவும் தெரிவித்து, அடிபைப்புகள் வைத்த இடங்களில் எல்லாம் சினிடெக்ஸ் டாங்க் வைக்கப்பட்டுள்ளது எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்கள் குறித்து எனக்கு முந்தைய காலங்களாக இருப்பினும் என்னால் இது குறித்து நேரடி ஆய்வும் விசாரணையும் செய்யப்பட்டுள்ளது எனவும் மீண்டும் தேவையானால் நேரடியாக ஆய்வு செய்து விளக்கம் அளிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முளகுமூடு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க கடிதம், முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரின் நேரடி வாக்கு மூல பதிவுகளை கருத்தில் கொள்ளும்போது முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை, 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விதிகள் 2015ன் விதி 6ன்படி அனுப்பக் கோரி இம்முறைமன்ற நடுவ அமைப்பு கடித எண் 671/2016/பே/நாள் 19.07.2016ல் அறிவிப்பாணை அனுப்பியும், 20.02.2017 ம் தேதிய நேரடி விசாரணையின்போது வலியுறுத்தியும், வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரே பதிவு செய்தபோதும், தனது முறையீட்டு மனுவினை இதுவரை முறையாக விதிகளின்படி சமர்ப்பிக்கவில்லை. மேலும் முறையீட்டு மனுதாரர் மேற்படி முளகுமூடு பேரூராட்சி தலைவர் மீது தெரிவித்துள்ள புகார்களுக்கான ஆதாரங்களை ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைப்பதாக 20.02.2017ம் தேதிய தனது நேரடி வாக்கு மூலத்தில் பதிவு செய்தும் இதுவரை எந்த ஒரு ஆவணத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்பிக்கவில்லை. போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்ட போதும் விதிகளின்படி முறையாக முறையீட்டு மனுவை தாக்கல் செய்யவில்லை எனவே, 2015 ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதி 4-ன் கீழ் உரிய ஆதாரங்களுடன் முறையீட்டு மனு செய்யாததாலும் 20.2.2017 அன்று வாக்களித்தப்படி மேற்படி ஆதார ஆவணங்களை இந்நாள்வரை சமர்பிக்காததாலும் மற்றும் 2015 ஆம் ஆண்டு வதிகளில், விதி 8ன்படி முறையீட்டு மனுதாரரது முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தால் தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. இருப்பினும், விதி 8(2) சட்டவிதிகளுக்குட்பட்டு முறையாக முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் விதி 4ன் கீழ் புதிய மனுவாக கருதி தக்க பரிசீலனைகள் இம்முறைமன்ற நடுவத்தால் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்தும் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு ஜுலை திங்கள் 27ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

31.7.17

31/7/17

பெறுநர்

திரு. ஒ.ஹோமர்லால், M.A.L.L.B,
CPI(ML) குமரி மாவட்ட செயலாளர்,
கருங்கல், கன்னியாகுமரி மாவட்டம்.

**நகல்**

செயல் அலுவலர்,
முளகுமூடு பேரூராட்சி.